**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை **திரு.S.பாஸ்கரன், M.A., LLM.,**

சார்பு நீதிபதி, ஆரணி,

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01ஆம் நாள் புதன்கிழமை

**அசல் வழக்கு எண்.57/2024**

(TNTM03000090/2024)

C. பிரபாகரன் ... வாதி

... எதிர் ...

A.வேலு ... பிரதிவாதி

இவ்வழக்கு என் முன்பாக 18.03.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.ரமேஷ்,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.S.ராஜா,B.A.,B.L., திரு.C.சண்முகம்,M.A.B.L., ஆகியோர் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சாட்சியம் மற்றும் சான்றாவணங்களைப் பரிசீலித்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

தாவா கடனுறுதிச்சீட்டின் படி வாதிக்கு, பிரதிவாதி அசல் மற்றும் வட்டி ரூ.2,30,800/–ம் மற்றும் பின்வட்டியும், இவ்வழக்கின் செலவுத்தொகையும் செலுத்தக் கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. வழக்குரையின் சுருக்கம்:–**

பிரதிவாதி, வாதியிடம் குடும்ப கடனாக 08.11.2022 அன்று ரூ.2,00,000/–ம் கடனாக பெற்றுக்கொண்டு அதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/–க்கு வட்டி ரூ.1.00 வீதம் வேண்டும்போது செலுத்துவதாக ஒப்புக்கொண்டு சரியான பிரதிபலனுக்கு தாவா கடனுறுதிச்சீட்டினை பிரதிவாதி, வாதியின் பெயருக்கு எழுதிக்கொடுத்தார். மேற்படி தாவா கடனுறுதிச்சீட்டுக்குரிய அசல் மற்றும் வட்டி தொகைகளை பைசல் செய்யும்படி வாதி பலமுறை பிரதிவாதியை நேரில் அணுகி கேட்டும், பிரதிவாதி தாவா கடனுறுதிச்சீட்டை பைசல் செய்ய கால அவகாசம் கோரி வந்தார். வாதி, பலமுறை பிரதிவாதிக்கு அவகாசம் கொடுத்தும், பிரதிவாதி தாவா கடனுறுதிச்சீட்டை பைசல் செய்யாமல் காலதாமதம் செய்து வந்த நிலையில், வாதி கடந்த 14.12.2023ம் தேதியன்று வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பினார். பிரதிவாதி, வாதியின் அறிவிப்பை பெற்றுக்கொண்டார். தாவா கடனுறுதிச்சீட்டை பைசல் செய்யாமல்

பிரதிவாதி, வாதியை அலைக்கழிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வீண் காலதாமதம் செய்து வரும் சூழ்நிலையில் வாதி வேறு வழியின்றி சமூகம் நீதிமன்றத்தில் பிரதிவாதியின் பேரில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2. எதிர்வழக்குரையின் சுருக்கம்:-**

வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள தாவா கடனுறுதிச்சீட்டு வழக்கானது சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல மோசடியானது தள்ளுபடி செய்வதற்கு உகந்ததாகும். இப்பிரதிவாதி தாமாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்ற அனைத்து சங்கதிகளையும் வாதியே Strict ஆக நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். வாதியின் தாவா 1ம் பத்தியில் வாதிக்கு, பிரதிவாதி தாவா ஒரு கடனுறுதிச்சீட்டு வாசகப்படி கொடுக்கவேண்டிய குடும்ப கடன் ரூ.2,00,000/- என்றும், மேற்படி அசல் தொகை ரூ.2,00,000/-க்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு வட்டி ரூ.1.00 வீதம் வேண்டும்போது செலுத்துவதாக ஒப்புக்கொண்டு சரியான பிரதிபலனுக்கு தாவா கடனுறுதிச்சீட்டினை பிரதிவாதி, வாதியின் பெயருக்கு எழுதிக்கொடுத்தார் என்றும், மேற்படி தேதியிலேயே வாதியிடம், இப்பிரதிவாதி ரொக்கமாக ரூ.2,00,000/-த்தை பெற்றுக்கொண்டு, வாதியின் பெயருக்கு எழுதிக்கொடுத்த ஒரு கடனுறுதிச்சீட்டு தாவாவில் தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிட்டிருப்பதை இப்பிரதிவாதி தரப்பில் வன்மையாக மறுக்கப்படுகிறது. அதனை முழுக்க முழுக்க வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவராவார். இப்பிரதிவாதி, வாதியிடமிருந்து எப்போதும், எந்தநேரத்திலும் கடனுறுதிச்சீட்டின் பேரில் கடன் பெற்றதே கிடையாது. எந்த ஒரு கடனுறுதிச்சீட்டும் வாதியின் பெயருக்கு எழுதிக்கொடுக்கவில்லையென இப்பிரதிவாதி தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. மேலும், வாதியை பற்றி இப்பிரதிவாதிக்கு யாரென்றே தெரியாத போது எதன் அடிப்படையில் வாதி, இப்பிரதிவாதிக்கு கடனுறுதிச்சீட்டின் பேரில் தாவா தொகையினை கொடுத்ததாக குறிப்பிட்டிருப்பது முற்றிலும் முழுக்க முழுக்க போர்ஜரியான கடனுறுதிச்சீட்டென இப்பிரதிவாதி தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

3. வாதியின் தாவா 2ம் பத்தியில் வாதி 08.11.2022ம் தேதியில் ரூ.2,00,000/-ம் வேண்டும் என கடனாக பிரதிவாதி கேட்டதாகவும், அதற்கு வாதி கையில் வைத்திருந்த ரூ.2,00,000/-த்தை பிரதிவாதியின் குடும்ப செலவுகளுக்கவும் கடன்களை பைசல் செய்வதற்காகவும் மேற்படி ரூ.2,00,000/-த்தை தர சம்மதித்ததாகவும், பிரதிவாதி பைசல் செய்வதாக கூறி ரூ.2,00,000/-த்தை வாதி, பிரதிவாதியிடம் செலுத்தி, தாவா கடனுறுதிச்சீட்டை தகுந்த சாட்சிகள் முன்னிலைக்கு பிரதிவாதியிடமிருந்து, வாதி எழுதிப்பெற்றதாகவும், மேற்படி, தொகையை பைசல் செய்வதாக கூறி, பிரதிவாதி, வாதிக்கு ஒரு கடனுறுதிச்சீட்டை தகுந்த சாட்சிகள் முன்னிலைக்கு எழுதி கையொப்பம் செய்து கொடுத்தார் என்று குறிப்பிட்டிருப்பதை இப்பிரதிவாதி தரப்பில் வன்மையாக மறுக்கப்படுகிறது. அதனை முழுக்க முழுக்க வாதியே Strict ஆக நிருபிக்க

கடமைப்பட்டவராவார். அவையனைத்தும் வாதியால் தாவாவிற்காக புனையப்பட்ட பொய்யான காரணங்களாகும். வாதியைப் பற்றி இப்பிரதிவாதிக்கு யாரென்றே தெரியாத போது பலமுறை தாவா கடனுறுதிச்சீட்டின் அசல் மற்றும் வட்டியை பைசல் செய்ய பலமுறை நேரில் கேட்டதாக குறிப்பிட்டிருப்பது விந்தையாகவும், விநோதமாகவும் உள்ளது. மேலும், இப்பிரதிவாதிக்கு வழக்கறிஞரிடமிருந்து வந்த அறிவிப்பை பெற்ற பிறகு தான், அரையாளம் கிராமத்தைச் சேர்ந்த வாதியின் பெயர் பற்றி, இப்பிரதிவாதிக்கு தெரிய வந்ததாகவும், இப்பிரதிவாதிக்கு, வாதி யாரென்றே தெரியாது என்பதால், மேற்படி வழக்கறிஞர் அறிவிப்புக்கு பதிலறிவிப்பு கொடுக்கவில்லையென இப்பிரதிவாதி தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

4. வாதியின் தாவா 4ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் வாதியால் ஜோடிக்கப்பட்ட கற்பனையான சங்கதியாகும். அதனை இப்பிரதிவாதி தரப்பில் வன்மையாக மறுக்கப்படுகிறது. அதனை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். உண்மை சங்கதியாதெனில், இப்பிரதிவாதி, வாதியிடம் எப்போதும் எந்த நேரத்திலும் கடன் பெற்றதே கிடையாது. மேலும், வாதியைப்பற்றி, இப்பிரதிவாதிக்கு யாரென்றே தெரியாத போது எதன் அடிப்படையில், வாதி, இப்பிரதிவாதிக்கு கடனுறுதிச்சீட்டின் பேரில் தாவா தொகையினை கொடுத்தாக குறிப்பிட்டிருப்பது முற்றிலும் முழுக்க முழுக்க போர்ஜரியான கடனுறுதிச்சீட்டென இப்பிரதிவாதி தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. இப்பிரதிவாதி, வாதியிடமிருந்து கடன் பெற வேண்டிய அவசியமே கிடையாது. அவ்வாறிருக்கையில், வாதியிடமிருந்து, இப்பிரதிவாதி கடனுறுதிச்சீட்டின் பேரில் 08.01.2022 தேதியில், ரூ.2,00,000/-ம் கடன் பெற்றதாக குறிப்பிட்டிருப்பது விந்தையாகவும், வேடிக்கையாகவும் உள்ளதாக இப்பிரதிவாதி தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. இப்பிரதிவாதி, வாதியிடம் எப்போதும், எந்த நேரத்திலும் கடனுறுதிச்சீட்டின் பேரில் கடன் பெற்றதே இல்லையென இப்பிரதிவாதி தரப்பில் அறுதியிட்டு தெரிவிக்கப்படுகிறது. இப்பிரதிவாதி கிரையம் பெற்றுள்ள பத்திரத்தில் உள்ள கையெழுத்தினை போலவே, வாதியின் தரப்பில் போர்ஜரியாக கையெழுத்து செய்து, தாவா கடனுறுதிச்சீட்டினை ஒருசில தவறான நபர்களுடன் போர்ஜரியாக தயார் செய்து, இப்பிரதிவாதி, வாதியிடமிருந்து பணத்தை அபகரிக்கவேண்டுமென்ற உள்நோக்கத்தில் இந்த தவறான தாவாவினை வாதியானவர் தாக்கல் செய்துள்ளார். வாதியின் தரப்பில், நீதிமன்ற கட்டணம் அதிகமாக கணக்கிடப்பட்டு இந்த தவறான தாவாவை வாதி தாக்கல் செய்துள்ளது, பிரதிவாதியிடமிருந்து பணம் பறிக்க வேண்டுமென்ற தவறான நோக்கம் தெளிவாக தெரியவருகிறது. வாதியின் வழக்கிற்கு வழக்கு மூலம் கிடையாது. எனவே, வாதியின் தவறான தாவாவை இப்பிரதிவாதியின் செலவுத்தொகை மற்றும் சி.பி.சி பிரிவு 35(எ) படி நஷ்ட ஈட்டுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட இப்பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5**. <u>வாதி தரப்பு வாதுரையின் சுருக்கம்:–</u>**

பிரதிவாதி , வாதியிடமிருந்து ரூ.2,00,000/–ம் கடன் பெற்றுக்கொண்டு தாவா கடனுறுதிச்சீட்டு எழுதிக்கொடுத்தார். அசல் மற்றும் வட்டியை திருப்பி செலுத்தாததால் வாதி தரப்பில் வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது. அறிவிப்பை பெற்றுக்கொண்ட பின்னரும் பிரதிவாதி பணத்தை திருப்பி கொடுக்கவில்லை. பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை. பிரதிவாதி, வாதியை யார் என்றே தெரியாது என்று தவறான எதிர்வழக்குரை தாக்கல் செய்திருக்கிறார். தாவா கடனுறுதிக்சீட்டை வாதி எழுதிக்கொடுத்தார் என்பதை வா.சா.ஆ.1ல் சாட்சி கையொப்பம் செய்த வா.சா.2 தனது சாட்சியத்தின் மூலம் நிரூபணம் செய்திருக்கிறார். கடனுறுதிச்சீட்டை எழுதிய வா.சா.3 தனது சாட்சியத்தில் பிரதிவாதி தாவா கடனுறுதிச்சீட்டில் கையொப்பம் செய்ததை சாட்சியம் அளித்துள்ளார். வாதி தரப்பு சாட்சியங்கள் மூலம் தாவா கடனுறுதிக்சீட்டு உரிய மறுபயனுக்காக பிரதிவாதி எழுதிக்கொடுத்தார் என்பது நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. வாதியின் வழக்கை அனுமதிக்கவேண்டும் என்று வாதம் செய்யப்பட்டுள்ளது.

**<u>6. பிரதிவாதி தரப்பு எழுத்துமூலமான வாதுரையின் சுருக்கம்:–</u>**

பிரதிவாதிக்கு, வாதியை யார் என்றே தெரியாது. வாதி ஆரணி வட்டத்தில் உள்ள கிராமத்தை சார்ந்தவர். பிரதிவாதி போளூர் வட்டத்தை சார்ந்த கிராமத்தில் உள்ளவர். வாதியிடமிருந்து பிரதிவாதி கடன் எதுவும் வாங்கவில்லை. தாவா கடனுறுதிச்சீட்டை பிரதிவாதி எழுதிக்கொடுக்கவில்லை. தாவா கடனுறுதிச்சீட்டு மோசடியான ஆவணம் ஆகும். வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், வாதி ஊருக்கும், பிரதிவாதி ஊருக்கும் சுமார் 20 கிலோ மீட்டர் தூரம் என்றும், பிரதிவாதி தெரிந்தவர் மூலம் பழக்கம் என்றும், நம்பிக்கையான ஆள் பணத்தை திருப்பி கொடுத்துவிடுவார் என்று சொன்னதின் பேரில் பணம் கொடுத்ததாகவும் கூறியிருக்கிறார். மேலும், தாவா பாண்டு பச்சை கலர் பாண்டு பேப்பரில் எழுதி வாங்கியதாக கூறியிருக்கிறார். ஆனால், தாவா கடனுறுதிச்சீட்டு அச்சடிக்கப்பட்ட ஆவணம் ஆகும். பிரதிவாதி விவசாய தொழில் செய்வதாகவும், அவசர தேவைக்கு கேட்டதால், கடன் கொடுத்ததாகவும் கூறியுள்ளார். பாண்டில் குடும்ப செலவிற்கு என்று எழுதப்பட்டுள்ளது. அதை தவிர வேறு ஏதேனும் சொல்லியிருந்தால், பிரதிவாதி கையொப்பம் செய்யவில்லை என்று எடுத்துக்கொள்ளாலாமா என்ற கேள்விக்கு இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். தாவா பாண்டு குடும்ப செலவிற்காகவும், வியாபாரத்திற்காகவும் அவசர நிமித்தம் காரணமாகவும் கடன் வாங்கியதாக எழுதப்பட்டுள்ளது. ஆனால், வாதி மேற்படி விவரங்களை கூறவில்லை. பாண்டில் எத்தனை வில்லைகள் ஒட்டப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு கூறி வாதியால் சாட்சியம் அளிக்க முடியவில்லை. வீட்டின் அசல் பத்திரம் கொடுத்து கடன் வாங்கியதாக முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

7. வா.சா.2 வாதி தனது நண்பர் என்றும், பிரபாகரன் ஆங்கிலத்தில் கையொப்பம் போட்டிருப்பதாகவும், பாண்டு வெள்ளை பேப்பரில் எழுதப்பட்டதாகவும், பிரதிவாதி வேலுவை பணம் வாங்கிய அன்றுதான் பார்த்தேன் என்றும், அதற்கு முன்னர் இரண்டு நாட்கள் வந்து போனதாக சொன்னார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். வாதி தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், பணம் கேட்டு 2 வாரம் கழித்து கொடுத்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். வாதியின் சாட்சியமும், வா.சா.2ன் சாட்சியமும் முரண்பாடாக உள்ளது. கடனுறுதிச்சீட்டை பற்றி வா.சா.2 சரிவர சாட்சியம் அளிக்கவில்லை என்பது புலனாகிறது.

8. வா.சா.3 தனது சாட்சியத்தில், பிரதிவாதி வேலு தமிழில் கையொப்பம் போட்டிருக்கிறார் என்று முரண்பாடாக சாட்சியம் அளித்திருக்கிறார். பாண்டை நிரப்பிய பிறகுதான் வேலு மற்றும் சாட்சி கையொப்பம் செய்ததாகவும், அதன்பிறகு தான் கையொப்பம் செய்ததாகவும் தெளிவாக சாட்சியம் அளித்திருக்கிறார். வேலு ஆங்கிலத்தில் கையொப்பம் போடப்பட்டுள்ளதாக கடனுறுதிச்சீட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், வேலு தமிழில் கையொப்பம் போட்டதாக வா.சா.3 முரண்பாடாக சாட்சியம் அளித்துள்ளார்.

9. பிரதிவாதியை வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும்போது, வாதி பிரபாகரனை எனக்கு யார் என்றே தெரியாது. வாதி எந்த ஊர் என்று தெரியாது. வா.சா.ஆ.1ல் உள்ள கையொப்பம் என்னுடைய கையொப்பம் அல்ல. வா.சா.ஆ.1ல் சாட்சி கையொப்பம் செய்துள்ள முனிதாஸ் மற்றும் ஸ்ரீதர் எனக்கு தெரியாது. வாதி தரப்பு வழக்கறிஞர் அறிவிப்புக்கு பிறகுதான் பிரதிவாதிக்கு வழக்கு பற்றி தெரியும் என்று சாட்சியம் அளித்திருக்கிறார். வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியது யார் என்ற விவரம் தெரியாது என்றும், வாதியை தெரியாது என்றும் தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.3ல் உள்ள கையொப்பம் ஒரே மாதிரி உள்ளது என்றால் பாண்டில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல என்று பிரதிவாதி மறுத்துள்ளார். எனவே வாதி தரப்பில்தான் கடனுறுதிச்சீட்டை நிரூபணம் செய்யவேண்டும். கடனுறுதிச்சீட்டில் உள்ள கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் என்பதை தடயவியல் நிபுணருக்கு அனுப்பி வாதி தரப்பில் நிரூபணம் செய்யவில்லை. உண்மையில், கடனுறுதிச்சீட்டை வா.சா.3 எழுதியிருந்தால், பிரதிவாதி ஆங்கிலத்தில் கையெழுத்து செய்தது பற்றியும், கடனுறுதிச்சீட்டு அச்சடிக்கப்பட்டது என்பது அவருக்கு தெரிந்திருக்கும். வா.சா.ஆ.1 வாதி மற்றும் அவரது நண்பர்களான வா.சா.2 மற்றும் வா.சா.3 உதவியுடன் மோசடியாக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்பது பிரதிவாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. தாவா கடனுறுதிச்சீட்டு பிரதிபலன் அற்ற ஒன்றாகும். பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எழுத்துமூலமான வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

10. வாதியின் வழக்குரை, பிரதிவாதியின் எதிர்வழக்குரையிலிருந்து இவ்வழக்கை தீர்வு காண 17.06.2025ம் தேதி பின்வரும் எழுவினாக்கள் வனையப்பட்டது.

1. வாதிக்கு வழக்கு கடனுறுதிச்சீட்டை உரிய மறுபயனுக்காக பிரதிவாதி எழுதி கொடுத்தார் என்பது சரியா?

2. வாதிக்கு வழக்கு தொகை வட்டியுடன் கிடைக்க கூடியதா?

3. வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன?

11. வாதி தரப்பில், வாதி வா.சா.1 திரு.C.பிரபாகரன், வா.சா.2 திரு.முனிதாஸ், வா.சா.3 திரு.ஸ்ரீதரன் ஆகியோர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளனர். 08.11.2022 தேதியிட்ட ரூ.2,00,000/−த்திற்கான கடனுறுதிச்சீட்டு அசல் வா.சா.ஆ.1, 14.12.2023 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் மற்றும் அஞ்சல் ரசீது வா.சா.ஆ.2, அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.3, வா.சா.ஆ.1ல் உள்ள வா.சா.2ன் முதல் சாட்சி கையொப்பம் வா.சா.ஆ.4, வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதியவர் என்ற இடத்தில் உள்ள வா.சா.3ன் கையொப்பம் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

12. பிரதிவாதி தரப்பில், பிரதிவாதி திரு.வேலு பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார், பிரதிவாதி தரப்பில் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்பட்டவில்லை.

**13. எழுவினா எண்கள்.1 மற்றும் 2ற்க்கான தீர்வு:−**

1. வாதிக்கு வழக்கு கடனுறுதிச்சீட்டை உரிய மறுபயனுக்காக பிரதிவாதி எழுதி கொடுத்தார் என்பது சரியா?

2. வாதிக்கு வழக்கு தொகை வட்டியுடன் கிடைக்க கூடியதா?

வாதி தனது வழக்குரையில், வாதியிடம் ரூ.2,00,000/−த்தை பிரதிவாதி கடனாக பெற்றுக்கொண்டு ரூ.100/−க்கு வட்டி ரூ.1.00 வீதம் செலுத்துவதாக ஒப்புக்கொண்டு 08.11.2022ம் தேதியில் தாவா கடனுறுதிச்சீட்டை சாட்சிகள் முன்னிலையில் எழுதிக்கொடுத்தார் என்றும், கடனுறுதிச்சீட்டுக்குரிய அசல் மற்றும் வட்டியை செலுத்தும்படி வாதி பலமுறை கேட்டும் பிரதிவாதி திருப்பி செலுத்தவில்லை. எனவே வாதி தனது வழக்கறிஞர் மூலம் 14.12.2023ம் தேதி அறிவிப்பு அனுப்பியுள்ளார். அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டார். பதில் அறிவிப்பு அனுப்பவில்லை. பணத்தையும் திருப்பி செலுத்தவில்லை. எனவே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று விவரம் கூறப்பட்டுள்ளது.

14. பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில், பிரதிவாதி, வாதியிடமிருந்து எப்போதும் எந்த நேரத்திலும் கடன் வாங்கவில்லை. வாதி பெயருக்கு பிரதிவாதி கடனுறுதிச்சீட்டு எழுதிக்கொடுக்கவில்லை. வாதியை யார் என்றே

பிரதிவாதிக்கு தெரியாது. தாவா கடனுறுதிச்சீட்டு போர்ஜரியான ஆவணமாகும். தாவா கடனுறுதிச்சீட்டை வாதியே நிரூபணம் செய்யவேண்டும். வழக்கறிஞர் அறிவிப்பு வந்தபோது வாதி பெயர் மற்றும் அவர் அரையாளம் கிராமத்தை சேர்ந்தவர் என்பதும் தெரியவந்தது. வாதி யார் என்றே தெரியாத காரணத்தால், பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பவில்லை. பிரதிவாதி கிரையம் பெற்றுள்ள பத்திரத்தில் உள்ள கையெழுத்து போலவே வாதி தரப்பில் போர்ஜரியாக கையெழுத்து செய்து தாவா கடனுறுதிச்சீட்டை ஒருசில தவறான நபர்களுடன் போர்ஜரியாக தயார் செய்து பிரதிவாதியிடமிருந்து பணத்தை அபகரிக்கவேண்டி தவறான வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார் என்று கூறி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

15. பிரதிவாதி தாவா கடனுறுதிச்சீட்டை தான் எழுதிக்கொடுக்கவில்லை என்றும், கடனுறுதிச்சீட்டில் உள்ள கையொப்பம் தன்னுடையதல்ல என்று மறுத்துள்ளதால் தாவா கடனுறுதிச்சீட்டை நிரூபணம் செய்யவேண்டிய கடமை வாதியை சாரும். வாதி தரப்பில் வாதி தன்னை வா.சா.1 ஆகவும், தாவா கடனுறுதிச்சீட்டில் சாட்சி கையொப்பம் செய்த நபரை வா.சா.2 ஆகவும், தாவா கடனுறுதிச்சீட்டை எழுதிய நபர் வா.சா.3 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

16. வா.சா.ஆ.1ல் சாட்சி கையொப்பம் செய்துள்ள முனிதாஸ் என்பவர் தனது முதல் விசாரணை வாக்குமூலத்தில், பிரதிவாதி, வாதியிடம் ரூ.2,00,000/-ம் கடனாக பெற்றுக்கொண்டு வாதியின் வீட்டில் வைத்து கடனுறுதிச்சீட்டை எழுதிக்கொடுத்ததாகவும், கடனுறுதிச்சீட்டை பிரதிவாதி வருவாய் முத்திரை வில்லை மீது ஒரு கையொப்பமும், அதற்கு கீழே ஒரு கையொப்பமும் போட்டார் என்றும், கடனுறுதிச்சீட்டில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றும், ஆவணத்தை எழுதிய ஸ்ரீதரன் என்பவர் கையொப்பம் செய்ததாக கூறி சாட்சியம் அளித்துள்ளார். அவர் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், பாண்டில் எப்போது கையொப்பம் செய்தேன் என்றால், பாண்டு எழுதிய பிறகு கையொப்பம் செய்தேன். என் முன்பாகதான் பணம் வாங்கினார்கள். பாண்டின் 2 முத்திரை வில்லைகள் ஒட்டப்பட்டுள்ளது. பாண்டு ரூ.2,00,000/-த்திற்கு எழுதப்பட்டது. வட்டி ரூ.1.00 ஆகும். 500 ரூபாய் தாள்களாக 4 கட்டுகள் கொடுக்கப்பட்டது. பிரபாகரன் சேலை வியாபாரம் செய்வதில் வரும் பணத்தை வைத்திருப்பார். வேலு பணத்தை எண்ணி பார்த்ததார். கையொப்பம் செய்த பிறகுதான் பணம் வாங்கினார் என்று கூறி சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி வா.சா.2ன் சாட்சியத்தின் மூலம் பிரதிவாதி, வாதியிடம் ரூ.2,00,000/-ம் பணம் வாங்கிக்கொண்டு கடனுறுதிச்சீட்டு எழுதிக்கொடுத்துள்ளார் என்பது தெரியவருகிறது.

17. வா.சா.3 ஸ்ரீதரன் தாவா கடனுறுதிச்சீட்டை எழுதிய நபர் ஆவார். அவர் தனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தில், பிரதிவாதி, வாதியிடம் அரையாளம் கிராமத்தில் வாதி வீட்டில் ரூ.2,00,000/-ம் கடன் பெற்றுக்கொண்டு, கடனுறுதிச்சீட்டில் கையொப்பம் செய்ததாகவும், தாவா கடனுறுதிச்சீட்டை தான் எழுதியதாகவும் சாட்சியம்

அளித்துள்ளார். அவர் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், தாவா புரோநோட்டை நான் தான் எழுதினேன். பாண்டு எழுதிய நேரம் 12.00 மணி முதல் 1.00 மணி இருக்கும். பாண்டு எழுதுவதற்கு 2 பேரும் விவரம் சொன்னார்கள். பாண்டு ரூ.2,00,000/—த்திற்கு வட்டி 1 பைசா ஆகும். 500 ரூபாய் தாள்களாக கொடுக்கப்பட்டது. பாண்டை நிரப்பிய பிறகுதான் வேலு மற்றும் சாட்சி கையொப்பம் செய்தார்கள். அதன்பிறகு நான் கையொப்பம் செய்தேன் என்று கூறி சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.3ன் சாட்சியத்தின் அடிப்படையில், பிரதிவாதி, வாதியிடம் ரூ.2,00,000/—ம் கடன் பெற்றுக்கொண்டு தாவா கடனுறுதிச்சீட்டில் கையொப்பம் செய்ததாகவும், அந்த பாண்டை வா.சா.3 எழுதியதாகவும், இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

18. வாதி தரப்பு சாட்சிகளான வா.சா.2 மற்றும், வா.சா.3 சாட்சிகளின் சாட்சியத்தின் மூலம் பிரதிவாதி, வாதியிடம் கடன் பெற்றுக்கொண்டு தாவா கடனுறுதிச்சீட்டில் கையொப்பம் செய்துள்ளார் என்பது நிரூபணம் ஆகிறது. வா.சா.ஆ.1 ஆன கடனுறுதிச்சீட்டை பிரதிவாதி, வாதிக்கு உரிய மறுபயனுக்காக எழுதிக்கொடுத்துள்ளார் என்பது வாதி தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

19. வாதி தரப்பில் தாவா கடனுறுதிச்சீட்டு பிரதிவாதியால் எழுதிக்கொடுக்கப்பட்டது என்பது நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால், வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டு பிரதிவாதியால் எழுதிக்கொடுக்கப்படவில்லை என்பதையும், வா.சா.ஆ.1ல் உள்ள கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்பதை பிரதிவாதி நிரூபணம் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இந்த வழக்கில் பிரதிவாதி தரப்பில், பிரதிவாதி பி.வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். பிரதிவாதி தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. வாதி தரப்பில் வா.சா.2 மற்றும் வா.சா.3ன் மூலம் தாவா கடனுறுதிச்சீட்டு பிரதிவாதியால் எழுதிக்கொடுக்கப்பட்டது என்பது நிரூபணம் செய்யப்பட்டுள்ள நிலையில், வா.சா.ஆ.1ல் உள்ள கையொப்பம் தன்னுடைய கையொப்பம் இல்லை என்று நிரூபணம் செய்வதற்கு பிரதிவாதி எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

20. வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பு இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்த அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.3ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், வாதி தரப்பில் 14.12.2023ல் அனுப்பிய அறிவிப்பை நான் வாங்கினேன். வா.சா.ஆ.3 அஞ்சல் ஒப்புகை அட்டையில் உள்ள கையொப்பம் அறிவிப்பு வாங்கியபோது போட்டேன் என்று ஒப்புக்கொண்டுள்ளார். பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்பதையும் ஒப்புக்கொண்டுள்ளார். வா.சா.ஆ.2 அறிவிப்பை ஆராய்ந்து பார்க்கும்போது, அதில் வாதியிடம், பிரதிவாதி 08.11.2022ல் ரூ.2,00,000/—ம் பெற்றுக்கொண்டு வாதி பெயருக்கு

கடனுறுதிச்சீட்டு எழுதிக்கொடுக்கப்பட்டதாக விவரம் கூறப்பட்டுள்ளது. அந்த அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டுள்ளார். ஆனால், அந்த அறிவிப்புக்கு பிரதிவாதி தரப்பில் பதில் அறிவிப்பு ஏன் அனுப்பப்படவில்லை என்பதற்கு தகுந்த விளக்கம் எதுவும் பிரதிவாதி தரப்பில் முன்வைக்கப்படவில்லை.

21. எதிர்வழக்குரையில், வாதியை தனக்கு தெரியாது என்றும், தாவா கடனுறுதிச்சீட்டை தான் எழுதிக்கொடுக்கவில்லை என்றும் கூறியுள்ள நிலையில், மேற்படி விவரங்கள் கூறி வாதிக்கு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்பது தெரியவருகிறது. பிரதிவாதி எதிர்வழக்குரையில் கூறியிருப்பதுபோல் வாதியை தனக்கு தெரியாது என்று கூறி வழக்கறிஞர் அறிவிப்புக்கு உரிய பதில் அறிவிப்பை பிரதிவாதி அனுப்பியிருக்கவேண்டும். எனவே, பிரதிவாதி தன் எதிர்வழக்குரையில் கூறியிருக்கும் விவரமான வாதியை தனக்கு யார் என்றே தெரியாது என்பதும், தாவா கடனுறுதிச்சீட்டை தான் எழுதிக்கொடுக்கவில்லை என்பதும் பிரதிவாதியால் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

22. வா.சா.ஆ.1 ஆன கடனுறுதிச்சீட்டை பிரதிவாதி கடன் பெற்றுக்கொண்டு எழுதிக்கொடுத்தார் என்பதை வாதி தரப்பு சாட்சிகள் வா.சா.2 மற்றும் வா.சா.3 மூலம் வாதி தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 பிரதிவாதியால் எழுதிக்கொடுக்கப்பட்டது என்பது நிரூபணம் செய்யப்பட்டுள்ள நிலையில், மாற்றுமுறை ஆவண சட்டப் பிரிவு 118ன் படி தாவா கடனுறுதிச்சீட்டு உரிய மறுபயனுக்காக எழுதிக்கொடுக்கப்பட்டது என்ற சட்டப்படியான அனுமானம் வாதிக்கு ஆதரவாக ஏற்பட்டுள்ளது. மேற்படி சட்டப்படியான அனுமானத்தை முறியடிக்கும் வகையில் பிரதிவாதி தரப்பில் தகுந்த சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் அளிக்கப்படவில்லை.

23. எனவே, தாவா கடனுறுதிச்சீட்டு உரிய மறுபயனுக்காக வாதிக்கு, பிரதிவாதியால் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றும், வாதிக்கு தாவா தொகை வட்டியுடன் கிடைக்கக்கூடியது என்று இந்த எழுவினாக்கள் 1 மற்றும் 2ற்க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**24. எழுவினா.3:-**

வாதிக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் என்ன?

வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய உடன் பிரதிவாதி கடன் தொகையை திருப்பி செலுத்தியிருந்தால், வாதிக்கு வழக்கு தாக்கல் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. பிரதிவாதி, வாதிக்கு வழக்கு தாக்கல் செய்யவேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளார். எனவே வாதிக்கு வழக்கு செலவுத்தொகையை பிரதிவாதி செலுத்தவேண்டும் என்று தீர்மானித்து எழுவினா-3ற்க்கு தீர்வு காணப்படுகிறது.

இவ்வழக்கு அனுமதிக்கப்படுகிறது.

**இறுதியாக,** பிரதிவாதி தாவா தொகை ரூ.2,30,800/-ம் அசல் தொகை ரூ.2,00,000/-க்கு வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் தீர்ப்பாணை தேதிவரை 9% வட்டியும் தீர்ப்பாணை தேதி முதல் தொகை செலுத்தும் வரை 6% வட்டியும் மற்றும் வழக்கு செலவுத்தொகையும் செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2026.04.01 17:40:12 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.

**வாதி தரப்பு சாட்சிகள்:-**

வா.சா.1 திரு.C.பிரபாகரன்,(வாதி)

வா.சா.2 திரு.முனிதாஸ்

வா.சா.3 திரு.ஸ்ரீதரன்

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:-**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 08.11.2022 | தேதியிட்ட ரூ.2,00,000/-த்திற்கான கடனுறுதிச்சீட்டு அசல். |
| வா.சா.ஆ.2 | 14.12.2023 | தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் மற்றும் அஞ்சல் ரசீது. |
| வா.சா.ஆ.3 | - | அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை. |
| வா.சா.ஆ.4 | - | வா.சா.ஆ.1ல் உள்ள வா.சா.2ன் முதல் சாட்சி கையொப்பம். |
| வா.சா.ஆ.5 | - | வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதியவர் என்ற இடத்தில் உள்ள வா.சா.3ன் கையொப்பம். |

**பிரதிவாதி தரப்பு சாட்சிகள்:-**

பி.வா.சா.1 திரு.வேலு, (பிரதிவாதி)

**பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்:-** **இல்லை**

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2026.04.01 17:40:21 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.